பொத்துவில் பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்
------------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட்05 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து பொத்துவில் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்கான கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் குப்பைகளை சேகரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 215 பிளாஸ்டிக் கூடைகளில் மீளாய்வாண்டின் இறுதியில் பாவனைக்கு எடுத்தக்கொள்ளாது எஞ்சியுள்ள 177 கூடைகளின் இருப்புப் பெறுமதி ரூபா 290,634 சொத்துக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சுக்கள் மற்றும் திட்ட அலுவலகங்' களிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்ட 14 வாகனங்களினதும் சபைக்குச் சொந்தமான 15 வாகனங்களினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) களஞ்சியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்சாரப் பொருள் இருப்புக்களின் பெறுமதி ரூபா 14,000 மீளாய்வாண்டில் சொத்துக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான சந்தைக் கடைகளை வாடகைக்கு பெற்ற 08 நபர்களிடமிருந்து 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள கடை வாடகை ரூபா.32,667 தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 23 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.112,354 தொகையையும், வேலையை விட்டுவிலகிய 17 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 435,700 தொகையையும் இடமாற்றம் பெற்றுச்சென்ற நிறுவனத்திடமிருந்து அல்லது அவர்களது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 23 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமரப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,096,724 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 1,575,692 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.1,521,032 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள், நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீத வரிகள் அறவிடுவதற்கான உபவிதிகளை உருவாக்கி வீதவரிகளை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1992 முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 1,718,703 தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள்

(அ) மீளாய்வாண்டில் பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் வியாபார நிலையங்கள், உணவகங்கள், வாடி வீடுகள் மற்றும் உல்லாச விடுதிகள் போன்றவை உள்ளடங்களாக 674 நிலையங்களுக்கு வருடாந்த உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படுவதற்காக ரூபா 1,561,138 அறவிடப்பட்ட போதிலும், கட்டணம் அறவிடப்பட்ட அந்நிலையங்களில் 450 நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப் பத்திரங்கள் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 23 வரை சபையால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 232 சதுர கிலோமீற்றர் பரப்புள்ள பிரதேச சபையின் எல்லைக்குள் நிறுவப்பட்டுள்ள விளம்பரப்படுத்தல் பதாதைகளுக்கான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149, 150, 151 மற்றும் 152 ஆம் பிரிவுக்கு அமைய, உபவிதிகளை உருவாக்கி உரிமைக் கட்டணங்களை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காததால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 500,000 தொகை வருமானத்தை சபை இழந்துள்ளது.

2.2.3 வாடகை வருமானம்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபைக்கு சொந்தமான 65 சந்தைக்கடைகளை வாடகைக்கு பெற்ற 28 நபர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டின் இறுதிவரை அறவிடவேண்டிய நிலுவை வாடகை ரூபா 446,882 தொகையையும், 05 நபர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடவேண்டிய நிலுவை வாடகை ரூபா 28,000 தொகையையும் 2015 மார்ச் 23 வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

(அ) 25 கடைகளைக் கொண்ட பொத்துவில் பொதுச்சந்தை கடைத் தொகுதியில் 16 கடைகள் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 23 ஆம் திகதி வரை மூடப்பட்டிருந்த போதிலும் அக்கடைகளுக்கான மின்சாரக் கட்டணம் ரூபா 184,320 தொகை சபையால் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்பை வழங்கும் நோக்குடன் 2008 மற்றும் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலக தரிசன நிறுவனத்தின் ரூபா 1,231,600 நிதியையும் சபையின் ரூபா 1,612,127 நிதியையும் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட உரிய இயந்திரங்களுடன் கூடிய காகித மீள்சுழற்சி நிலையமானது ஊழியர்களுக்கு போதிய பயிற்சி வழங்கப்படாமையின் காரணமாக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாது மூடப்பட்டுள்ளது. இந்நிலையத்தை பயன்படுத்துவது தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 23 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமான முகாமைத்துவம்